# மறை அரும்பு

திருப்பாலர் சபை வெளியீடு

## நாம் உலகை அலங்கரிக்கும்
## இயேசுவின் சிறுமலர்கள் ஆவோம்



5/=

மலர் 22 இதழ் 3 புரட்டாதி - மார்கழி 2015



அன்பான பிள்ளைகளே இயேசு உங்களை அன்பு செய்கிறார். இயேசு பலஸ்தீனாவில் வாழ்ந்த போது அவர் சொன்னது, சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள். விண்ணரசு அவர்களதே. ஆசீர்வதிக்க பெற்றோர் தங்களது பிள்ளைகளை இயேசுவிடம் அழைத்துவரவிரும்பினார்கள்.

இயேசு ஒரு நாளும் மறுப்புதெரிவிக்கவில்லை. இயேசு தனது சீடர்களுக்கு கூறினார். சிறுபிள்ளைகளை தன்னிடம் வருவதை தடைசெய்ய வேண்டாம் என்று. அதனால் தான் திருச்சபை சிறுபிள்ளைகளிடம் மிகுந்தகவனம் எடுக்கிறது. திருத்தந்தை பிரான்சிஸ்சின் உரையில் சிறுவர்களின் பராமரிப்பையும் அன்பையும் பற்றி கூறுகிறார். அத்தோடு விசேடமாக உலகில் பல நாடுகளிலும் கைவிடப்பட்ட சிறுவர்களை பற்றி கூறுகிறார்.ஒவ்வொரு பெற்றோருடையதும் அரசாங்கத்தினுடையதும் கடமை சிறுவர்களை போதுமான அளவிற்கு பாதுகாத்தல் வேண்டும்.அத்தோடு அவர்களுக்கு போதுமான அளவு உணவு கொடுக்க வேண்டும். அப்போது அவர்கள் சந்தோஷமாக வளர்ந்து, அவர்களுடைய பெற்றோருக்கு சந்தோஷத்தைக் கொடுப்பார்கள்.

இயேசு உங்களை ஆழமாக அன்பு செய்கிறார். அத்தோடு அந்த அன்பை அவர் முழுமையாக எதிர்பார்க்கிறார். இயேசுவை அன்பு செய்ய அவரைப் பற்றி ஆழமாக அறிந்திருக்க வேண்டும். இயேசு தன்னையே ஒரு பரிசாக எங்களுக்கு திவ்விய நற்கருணையாக தந்திருக்கிறார். எமது இயேசு கிறிஸ்து உண்மையாக அதில் பிரசன்னமாயிருக்கிறார்.அத்தோடு அது எமது ஆன்மாவுக்கு ஒரு உணவாகும். ஆகவே, நீங்கள் திருச்சபையில் விரும்பி பங்கெடுக்க வேண்டும். புனித தன்னையை கோயிலுக்குள் பேண வேண்டும். அத்தோடு குருவானவர் என்ன செய்கிறார் என்ற அவதானிக்க வேண்டும். திருப்பலியில் பாடப்படும் பாடலில், சொல்லும் செபத்தில் பங்கெடுப்பதன் மூலம் நீங்கள் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுக்க முடியும். நீங்கள் இயேசுவின் நண்பராக இருந்தால் கட்டாயம் நீங்கள் அடிக்கடி நற்கருணையை சந்திக்க உங்களின் பங்கு கோயிலுக்கு போவீர்கள், அவர் உங்களுக்காக காத்துகொண்டிருப்பார்.

அத்தோடு நீங்கள் இயேசுவின் அன்பை இன்னும் ஒரு வழிமூலம் காட்டலாம். அதாவது உங்களின் பங்கிலுள்ள பாலத்துவ சபையில் ஆர்வத்துடன் செயற்பட்டு வார இறுதியில் நடக்கும் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு தெரியும் மற்ற சிறுவர்கள் இயேசுவை எவ்வாறு அன்பு செய்கிறார்கள் என்று தெரியும்.ஒவ்வொரு வருடமும் பாலத்துவ சபைக்கு என்று ஒரு நாள் ஒதுக்கி கொண்டாடப்படுகிறது. அன்று எல்லா சிறுவர்களுக்க பாப்பரசருக்கு மன்றாடுதல் அத்தோடு அவர்களது பெற்றோருக்கு முன்னால் நடனமும் பாடல்களும் சந்தோஷமாகவும் கழிப்பார்கள்.

அன்பான சிறுவர்களே இயேசுவை அன்பு செய்ய நான் உங்களை அழைக்கிறேன். அவர் ஒரு இறைவனின் மதிப்புள்ள மகன் அத்தோடு எங்களினால் அன்பு செய்ய வேண்டியவர். அவரை அன்பு செய்யுங்கள். அவரின் விசுவாசமாயிருங்கள்.எனவே, உங்களுக்கு அவரின் உண்மையான அன்பு கிடைக்கும்.

**அதிமேதகு ஆயர். தோமஸ் சௌந்திரநாயகம்**
**யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்.**



"குந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்று சொல்வார்கள் . ஆகவே தான் நாம் எல்லோருமே குழந்தைகளை விரும்புகிறோம். கடவுளின் அளவு கடந்த அன்பையும் , நன்மைதனங்களையும் அவரது பண்புகளையும் கொண்டு பிறக்கின்ற குழந்தைகள் வளர, வளர தீமைகள் நிறைந்த சமூகத்தாலும் உலக போக்குகளினாலும் ஆட்கொள்ளப்பட்டு தங்களிடம் காணப்படுகின்ற இறைசாயலை இழக்க தொடங்குகின்றார்கள் எனவே இவர்களை நெறிப்படுத்துவம் பாதுகாப்பதும் எமது தலையாய கடமையாகும்.

இன்றைய சிறுவர்களின் மனதில் தோன்றும் ஏன், எதற்கு , எப்படி போன்ற எண்ணிலடங்கா கேள்விகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகின்றன. ஆம் இத்தலைமுறையின் அனைத்தையும் அறிந்து ஆராய்ந்து செயல்பட விழைகின்றனர். இவ்வாறு அறிதல்சார் கூறுகள் கூடிய ஆன்மீக வாழ்க்கை கட்டியெழுப்புவதற்காக அவர்கள் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது போன்ற விதிமுறைகளை வழிகாட்ட வேண்டியது எம் பாரிய பொறுப்பாக இருக்கின்றது.



கிஸ்தவ பண்பாட்டை வாழ்வாக்கி எம் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தை முறைகளுக்கும் எவை அவசியமெனப்படுகின்றதோ அவற்றை நெறியியல்சார் கூறுகள் கொண்டவாறே எம் சிறார்களை வழிப்படுத்த இக்கையே உதவுகின்றது.

பரந்து பட்ட உலகில் சின்ன சின்ன ஆசைகளோடு பயணிக்கும் சிறுவர்களுக்கு படைப்பிலே இறைவனைக் கண்டு கொள்ள அவரை அன்பு செய்து அனுபவிக்க தம் செயல்களோடு கூடிய விசுவாச வாழ்வை கட்டியெழுப்பி இயேசுவின் சிறிய மலர்களாக மலர்ந்து மணம் பரப்பி உலகை மகிழச் செய்ய வாழ்த்துகிறேன்.

அன்பார்ந்த குழந்தைகளே பெத்தலகேமில் மாட்டுத் தொழுவத்தில் மனிதனாகப் பிறந்த மன்னன் இயேசு இறைத்தன்மைனயைப் பகிர்ந்து பிறருக்கு கொடுத்தது போல் சிறுவர்களாகிய நாம் இந்த அர்ப்பண ஆண்டிலே இயேசுவின் சிறிய மலர்களாய் எம்மை பிறருக்காக அர்ப்பணிக்க முன்வாருங்கள் இயேசுவுக்கு உகந்த செயல்களாகிய பிறர்சிநேகம் விட்டுக் கொடுத்தல் மன்னித்தல் இரக்கம் காட்டுதல் போன்ற பண்புகளைக் கொண்டு வாழ்வதன் மூலம் உலகை அலங்கரியுங்கள்

இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக!.

அருட்பணி. அ. யூட் குருஸ்
மன்னார் மறைமாவட்ட இயக்குனர்.



# பிறந்தாரே நம் தேவன்

எம் பாவம் போக்கிடவே
பாலகன் இயேசு - இப்
பாரினில் பிறந்தாரே
மானிடம் மகிழ்ந்திடுதே

இருண்டிருந்த உலகு தனில்
ஒளிதனைத் தந்தவரே
உத்தமர் இயேசு - இவ்
உலகினில் பிறந்தாரே

உலகெங்கும் குதுகலமே
எம் பாலன் பிறந்ததனால்
பாரெங்கும் மீட்பொலியாம்
நம் தேவன் பிறந்ததினால்



பா. கொலின்
தரம் - 7
பெரியகோமரசன் குளம்
வவுனியா

# அன்னை

பண்பின் பாடநூல் நீ
அறிவின் சிகரம் நீ - என்
ஆருயிர் நீ
அன்பை அறிவைத் தந்தவளே
உணவை ஊட்டி வளர்த்தவளே
சிசுவாய் என்னை ஈன்றவளே!

நிஜத்தின் நிஜமும் நீதான் - என்
நெஞ்சில் இதமும் நீதான்
உயிரின் துடிப்புக்கள் நீதான்
என் உயர்வின் தூண்டுதல் நீதான்

உலகம் என்ற ஒன்றை - நான்
உன்னில் காண்கிறேன் தாயே
உறக்கம் என்ற ஒன்றை - உன்
மடியில் கொண்டேன் தாயே

**வீ . றோகித் கொஸ்தா**
**தலைமன்னார்**
**தரம் - 2**

# இயேசு

அன்பானவர் என் இயேசு,
பாசமானவர் என் இயேசு,
நேசமானவர் என் இயேசு,
அழகானவர் என் இயேசு,

வாழ்விற்கு வழியானவர் என் இயேசு,
வழிமேலே விழி வைத்துக் காத்திருப்பேன்...
சீக்கிரம் வாங்கப்பா!
உங்கள் முகம் காட்டுங்கப்பா!

ரொ. ஜெரோமி கிளரின்
புனித அந்தோனியார் பங்கு
தரம் - 7

# வேதாகமம் கூறும் சில நீதி மொழிகள்

வலிமை உடையவரை விட பொறுமை உடையவரே மேலானவர்.
நகரை அடக்குபவரை விட தன்னை அடக்குபவரே மேலானவர். (நீ. மொ : 16: 32)

சொரணை கெட்டவனுக்கு நூறு அடி கொடுப்பதை விட உணர்ச்சி உள்ளவர்களுக்கு ஒரு சொல் சொல்வது மிகுந்த பயனைத் தரும்.
(நீ. மொ : 17: 10)

நல்வழி நடக்க பிள்ளையை பழக்கு முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டுவிடமாட்டார். (நீ. மொ : 22: 12)

நீ உன் தந்தையும் தாயையும் மகிழ்விப்பாயாக. உன்னை பெற்றவளை களிகூரச் செய்வாயாக. (நீ. மொ : 23: 25)

அடுத்திருப்பவரை இகழ்ந்தால் பாவமாகும். ஏழைக்கு இரங்குபவர் இன்பம் துய்ப்பர். (நீ. மொ : 14: 21)

நல்லுரை கேட்பதில் சிந்தனையைச் செலுத்து அறிவூட்டும் மொழிகளுக்குச் செவிகொடு. (நீ. மொ : 23 : 12)

கடும் உழைப்பு எப்போதும் பயன் தரும் பேச்சினால் வருவது வெறுமையே (நீ. மொ : 14: 22)

பெப்பற்றுவா செபதேயு
கொக்குப்படையான்
சிலாவத்துறை



## பள்ளிப் பருவம்

அது ஒரு இனிய காலம்.
யாரும் அறியாத நேரம்
மனதில் ஒரு இன்பம்
நாளும் ஒரு துக்கம்

மற்றவர்களை துன்புறுத்தவதில்
ஓர் அற்ப ஆசை
அது ஒரு மாயமான உணர்வு
அந்த பள்ளிப்பருவம்

ஆசிரியரிடமிருந்து ஒவ்வொரு
நாளும்
பற்பல குறைகள் குற்றங்கள்
அப்போது விட்ட தவறை
தற்போது எண்ணி வருந்துகிறேன்.

காமலின்
புனித. அந்திரேயார் பங்கு
தரம் - 7

## அன்னை

பண்பின் பாடநூல் நீ
அறிவின் சிகரம் நீ - என்
ஆருயர் அன்னை நீ
அன்பை அறிவைத் தந்தவளே
சிசுவாய் என்னை ஈன்றவளே!

நிஜத்தின் நிஜமும் நீதான் - என்
நெஞ்சத்தில் இதமும் நீதான்
உயிரின் துடிப்புக்கள் நீதான் - என்
உயர்வின் தூண்டுதல் நீதான்

உலகம் என்ற ஒன்றை - நான்
உன்னில் காண்கிறேன் தாயே
உறக்கம் என்ற ஒன்றை - உன்
மடியில் கொண்டேன் தாயே

பு. தமிழ் புகழன்
முருங்கன் (திருப்பாலத்துவ சபை)
தரம் - 1

## கவிதைத்துளிகள்

### தாய் - அம்மா

அம்மா உன்னோடு என்னைச்
சுமந்தாய் உதிரத்தை உணவாக்கி
உருக்கமாய் உவர்ந்தளித்தாய்
நீ என்றும் உலகம் என்றும்
குளிர வைத்தாய்

பத்துமாதம் உன் வயிற்றிலே
என்னைப் பூப்போலப் பாதுகாத்தாய்
இளம் பராயத்தில் இயேசுவின்
அழைத்துச் சென்றாய்
நல் வழியை உணவாக ஊட்டினாய்

உன்னை விட இவ் உலகத்தில்
உயர்ந்தவர் யார்
நீ அன்பும் பாசமும் ஊட்டுபவள்



கு. லக்சனா
கிறிஸ்தரசு மாணவர் இல்லம்
முருங்கன்
தரம் - 9

# இயேசு

நாசரேத்து என்னும் ஊரில் வாழ்ந்த யோசேப்புக்கும் மரியாளுக்கும் இயேசு பிறந்தார். இவருடைய பிறப்பின் நோக்கம் பாவத்துக்கு அடிமையாய் இருக்கும் மக்களை இரட்சித்து நித்திய ஜீவனை பெற்றுக் கொடுக்கவே. அவர் சிறுவயது முதற்கொண்டு தேவனுக்கும் பெற்றோருக்கும் கீழ்படிந்து வாழ்ந்தார். அதுவுமின்றி அவர் வேதாகமத்திலும் அறிவிலும் தேர்ச்சிப் பெற்றவராய் திகழ்ந்தார்.

தம்முடைய 12ம் வயதில்தேவாலயத்தில் அறிஞர்களுடன் விவாதம் செய்தவராய் காணப்பட்டார். தேவ நோக்கம் நிறைவேறும் வண்ணமாய் அவர் தம்முடைய 30ம் வயதிலே யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அப்போது அவர் ஆவியின் அபிஷேகம் பெற்றார். பின்னர் அவர் தனது பணியை ஆரம்பிக்க தொடங்கினார். சமாரியாவிலும் கலிலேயாவிலும் எருசலேமிலும் தனது பணியை ஆரம்பித்தார். அவருக்கு உதவியாக 12 சீடர்களை அவர் தெரிந்து கொண்டார். அவர்களுக்கு மறைபொருளையும் செய்து வந்தார். ஆனால் அவருடைய பணியில் நோக்கம் தேவ இராச்சியத்தை குறித்ததாகவே அமைந்தது. 32 வருடம் அவர் இப்பூமியில் பணியாற்றினார். பின்பு ரோமரால் கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டு சிலுவையிலே அறையப்பட்டார். இயேசு சொன்ன வார்த்தையின் படியே அவர் 3ம் நாளிலே மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பின்பு அவர் விண்ணுலகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

“மீண்டும் வருவேன் என்று வாக்கு கொடுத்தார்.
அந்நாள் வரை அவருடய பணி செயலாற்றுகிறது.”

டொரின் டேவிட்
தரம் - 3
புனித. மரியாள் ஆலயம்
கொழும்பு

# எனக்கு தெரிந்தது

1. அதிகாலை மலைகளின் நாடு எனப்படும் இடம் எது?
   அருணாச்சலப்பிரதேசம்
2. ஆசியாக்கண்டத்தின் பரப்பளவு யாது?
   44798000 சதுரகிலோமீற்றர்.
3. மலாக்கின் மலர் எனப்படும் இடம் எது?
   சிறீவாஷன்(சீனா)
4. கொழும்பு நகருக்கு 1983ல் சூட்டப்பட்ட பெயர் என்ன?
   சிறீஜெயவர்தன புர
5. உலகிலே மிகப்பெரிய ஜனநாயக நாடு எது?
   இந்தியா
6. உலகிலே பருத்தி உற்பத்தியில் முதலிடம் பெறும் நகர்?
   மார் செஸ்டர்
7. உலகிலே மிகப்பெரிய தீவு எது? அதன் பரப்பளவு யாது?
   கிறின்ஸ்லாந்து 82000 சதுரமைல்
8. மழைத்துளி சராசரி எவ்வளவு வேகத்தில் விழுகின்றது?
   12முஆ வேகம்
9. அணுக்கொள்கை ஒன்றை முதலில் வெளியிட்டவர்?
   ஜோன் டால்டல்
10. உலகிலே மிகப்பெரிய இராணுவம் எது?
   சீகா இராணுவம்(46 இலட்சம் இராணுவ வீரர்கள்)

இ. தர்மிஹா
தரம் - 6
முருங்கன்

# குழந்தை இயேசுவின் புனித தெராசாள்
# (1873 - 1897)

பிரான்ஸ் தேசத்தில் அலென்கன் என்ற இடத்தில் லூயிஸ், செலா என்பவர்களுக்கு மகளாக 02.01.1873ல் பிறந்தார். சிறுவயதில் இவர் ஒருமுறை ஆலயத்திற்கு சென்று செபிக்கையில் செபபுத்தகத்திலிருந்து ஒரு படம் கீழே விழுந்தது. அது இயேசு சிலுவையில் தொங்கும் படமாகும். இயேசுவின் இரத்தம் வீணாய் போகிறதே என்று ஏங்கினார். மனந்திரும்ப மறுத்த கொலைகாரன் ஒருவனை மனந்திரும்பும்படி தனது உணவு, உறக்கம், வேலை விளையாட்டுக்கள் அனைத்தையும் செபமாக மாற்றினார். அவன் மனம் மாறியது குறித்து இறைவனுக்கு நன்றி கூறினார். 15 வயதிலே கார்மேல் சபையிலே சேர்ந்தார். சபையிலே தரை கழுவுதல், மடத்தை பெருக்குதல், துணிகளை முடைத்து எடுத்து வைத்தல் போன்ற பணிகளை செய்தார். ஏனைய சகோதரிகள் கூறும் வேலைகளை பொறுமையுடன் செய்தார். வயோதிபக் கன்னியர்களையும் பொறுமையோடு பராமரித்து வந்தார்.

28.11.1888ல் வார்த்தை பாடுகளை கொடுத்தபோது அச்சடங்கில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆன்மாக்களை மீட்கவும், குறிப்பாக குருக்களுக்காக செபிக்கவுமே இச்சபையில் சேர்ந்தேன் என்று பதிலலித்தார். அன்புக்கு சிறந்த பதில் அன்பே என்பது இவரது விருதுவாக்கு.



புன்முருவலுடன் பிறருக்கு உதவிசெய்ய ஆவல் உள்ளவராக இருந்தார். துன்பங்களை பொறுத்துக்கொள்ள சிறந்த வழி குழந்தை மன நிலையில் கடவுளை நம்பி எம்மை அவருக்கு கையளித்து ஒறுத்தல்கள் செய்து நமது நம்பிக்கையை அவருடன் இணைத்து வாழ்வது தான் என்று கூறிக்கொள்வர்.

சரிவரச் சாப்பிடாததாலும் கடினமான தபமுயற்சிகளை செய்தாலும் இவருக்கு பல நோய்கள் தோன்றின. குறிப்பாக காசநோய் இவரை வாட்டியது. 30.09.1897 ல் பாடுபட்ட சுருபத்தை எடுத்துக்கொண்டு தன்மரண படுக்கையில் உம்மை நான் நேசிக்கிறேன். ஆண்டவரே என்று இறுதி வார்த்தைகனைக் கூறிக் கொண்டு இறைவனில் நித்திரை அடைந்தார்.

புஸ்பா நிராநா
தரம் - 9
மன்னார்.

# சிந்தனைத் துளிகள்

வணங்கத்தக்கவர்கள் - தாயும் தந்தையும்
வந்தால் போகாதது - புகழும் பழியும்
நம்முடன் வருவது - இளமையும் முதுமையும்
போனால் வராதது - மானமும் உயிரும்
இழைவைத் தருவது - பொறாமையும் கோபமும்
மிகப் பெரிய நோய் - பேராசை
ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு



வீ. ஜிம்றோன்
தரம் - 2
புனித யாகப்பர் ஆலயத்
கொக்குப்படையான்
மன்னார்.

# மனித மாண்பும் குடும்பமும்


வல்ல உறவுகளின் ஆணிவேர் நம்பிக்கையும் செபமும் இதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர்களே நாசரேத்தூர்த் திருக்குடும்பம் ஆகும். குடும்பங்கள் ஒளிரும் தீபங்களாகும். முதல் ஆதிப்பெற்றோராகிய ஆதாம் ஏவாளுக்கு அனைத்தும் இருந்தன. அவர்கள் ஒருவரையொருவர் நேசித்தார்கள். ஆனால் கடவுளுக்கு கீழ்படியும் மனநிறைவையும் அவரது கட்டளையை நிறைவேற்றும் எண்ணமும் இல்லாதால் பாவத்தைப் பெற்றெடுத்தார்கள். கடவுளின் தண்டணையையும் அனுபகின்றார்கள். ஆகவே, குடும்ப ஒற்றுமைகளையும் சலக செல்வங்களும் மட்டுமே ஒரு குடும்பத்திற்கு வாழ்வினைத் தந்து விட முடியாது. எனவே, மனநிலையை உருவாக்கும் பள்ளிக் கூடமாகவும் நமது கிறிஸ்தவக் குடும்பம் அமைய வேண்டும். குடும்பம் மூவொரு இறைவனைப் பிரதிபலிக்கும் இடமாகவும் அவரை சந்தித்து அவரது அன்பு, அருள் பழரசன்னத்தை உணர்ந்து அனுபவிக்கின்ற இடமாகவும் அமைகிறது. நாசரேத்தூர்த் திருக்குடும்பத்தில் பெற்றோருக்கு இயேசு உதவி செய்து அவர்களை மதித்து வாழ்ந்தது போல நாமும் எமது குடும்பத்தில் பெற்றோருக்கு கீழ்படிந்து, மதித்து உதவி செய்து சிறப்பான குடும்பமாக வாழ்ந்து சமூகத்தில் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கி மனித மாண்பை குடும்பங்களில் பேணி குடும்பத்தைப் பாதுகாப்போம். உலக சமூகத்திற்கும் திருச்சபைச் சமூகத்திற்கும் குடும்பமே உயிர்நாடி, முதுகெழும்பு.



மெ.தெ. யூப்பிரறேசியா
திருப்பாலத்ததுவ சபை
தரம் - 8
திருக்குடும்ப கன்னியர் மடம்
மன்னார்

# ஓவியத்துனூடே........

## நாத்தார் மரம்




பிரின்சிலா
தரம் - 1
பண்டாரவலை

படைப்பு



டி. எவோசியா. நனி
தரம் - 8
புனித அந்தோனியர் ஆலயம்
பண்டாரவலை

எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே



டி. டிலின்ட

தரம் - 5

புனித அந்தோனியார் ஆலயம்

பண்டாரவலை

## வேளாங்கன்னி மாதா



ஏ. டிலக்ஷன
புனித சூசையப்பர் ஆலயம்
கோணடும்மாவ
பதுளை

## புனித அந்தோனியார்



டி. அபிஷேக
தரம் - 8
பு. மரியாள் ஆலயம்
மட்டக்குளிய

# புனித யூதா ததேயு




சீ. சிரோனி இமேஷஜகா
தரம் - 3
பு யூதா ததேயு ஆலயம்
பசறை

# கடைசி இரவு



றுா. ரம்ஸ்டான்
தரம் - 7
மட்டக்குளிய

# இயேசுவின் முதல் புதுமை



ஜெனிபர் குரூஸ்
தரம் - 3
புனித. மரியாள் ஆலயம்
மட்டக்குளிய

## மாலை காட்சி




டீ. ஜெயநிஷா
மன்னார் பேராலயப்பங்கு

# நத்தார்





மாக்கஸ் டேபியன்
தரம் - 5
மன்னார்

பிறந்தநாள் கேக்



தே. ஜீவயதுர்சனா
தரம் - 3
சிறுக்கண்டல் பங்கு

## இறைவனின் அழகிய படைப்பு



ஆர். சஹுஜா
தரம் - 3
அடம்பன்



# காலம் நிறைவேறிய போது......

காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம்ப பிள்ளைகளை ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார் [கலாத்தி 4: 4-5] கடவுளுடைய சிந்தனையில் இந்த பெண்ணை கடவுள் தெரிந்தார்.மனிதன் எப்போது பாவம் செய்தானோ அப்போதே கடவுள் மனிதனை மீட்க தீர்மானித்தார் அந்த மீட்பில் அன்னையின் பங்கு இருக்கிறது.

இறைவன் நம்மை தம்முடைய பிள்ளைகள் ஆக்கிகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார் ஆதனால் தம் மகனையே இவ்உலகிற்கு அனுப்பி வைத்தார். தம் மகன் மனித அவதாரம் எடுக்க வேண்டும், மனித உடலுடன் கலக்க வேண்டும் என்றும் பெண்ணை கடவுள் தெரிந்தார்.கடவுள் வார்த்தை கடவுளாகவே இருந்தது அந்த வார்த்தை ஒரு சாதாரண மனிதனாக பிறப்பதற்கு இறைவன் சாதாரண பெண்ணை பயன்படுத்தினார். கடவுளாகவே இருந்தது அந்த வார்த்தையைக் கருத்தாங்கிய பெண்மணிதான் கன்னி மரியாள்! கன்னி மரியாளை கடவுளுடைய ஒரு இரகசியம் என்று சொல்ல வேண்டும்.



சொல்ல போனால் அந்த கன்னி தாயின் வித்து என்று சொல்லக்கூடிய இயேசுவின் விசுவாசிகளாக பிறந்த அனைவருமே அந்தத் தாயின் பிள்ளைகள்தான். அன்னையோடு இயேசுவோடும் நாம் ஒன்றித்து வாழும் பொழுது சாத்தான் நம்மீது ஆதிக்கம் செலுத்த முடியாமல் போகின்றது. இறைவனுடைய வார்த்தையை முழுமையாக நெஞ்சிலே தாங்கி அந்த விருப்பத்தை நிறைவேற்றி தந்த தாய்! எனவே அவள் கடவுளுடைய அடிமை என்று தன்னையே தாழ்த்திக் கொண்டு, கடவுளுக்கு விருப்பமானதையே செய்தாள். இதனால் அவள் வழியாக கடவுளுடைய திட்டம் இந்த பூமியிலே முழுமையாக நிறைவேறக் காரணமாக இருந்தது. இறைவனுடைய வார்த்தையை முழுமையாக நெஞ்சிலே தாங்கும் பொழுது, இறைவனுக்கு விருப்பத்தை நாம் செய்யும் போது எம்மை எதிர்க்கும் சாத்தானை நாம் எதிர்க்க முடியும். இதோ இந்தத் தாய் இந்த நேரத்தில் நமக்கு சந்தோஷத்தின் தாயாக இருக்கின்றாள். எனவே "சந்தோஷத்தின் மாதாவே" என்று அழைக்கின்றோம். அந்தத் தாய் கால் எடுத்து வைக்கும் பொழுது நம் உள்ளத்திலே சந்தோஷம் நிரம்பும். சாத்தானை நாம் மேற்கொள்ள முடியும். பாவத்தில் இருந்தும் பாவ சாபத்தில் இருந்தும் நாம் விடுதலைப் பெற்று சந்தோஷமாக வாழ முடியும்.

**தேசிய செயலகம்.**



# அன்னையின் சிறப்பு

மாதம் மடியிலேந்தி
பாரினிலே என்னை ஈன்றெடுத்து
பாலகனாய் நானிருந்த வேளை
பாச அமுதை ஊட்டி வளர்த்து

நல்லவனாக நான் வாழ
நற் பண்பிலே என்னை வளர்த்து
நாளைய சமுதாயம் நற் பெயர் சூட்டிடவே
நல்ல நல்ல எண்ணங் கொண்டு

தன்கஸ்டம் பாராது என்னை
ஊக்கமுடன் கற்க வைத்து
ஊர் போற்ற பார் போற்ற
உத்தமனாக என்னை வளர்த்து



என் வயிற்றுப் பசி போக்கிட
தன் வயிற்றுப் பசி மறந்து
தாலாட்டும் பாடி நிம்மதியாய்
தூங்க வைத்து இன்னோர் ஜென்மம்
இருந்தால் உன்னருகில்
உன் மடியில் தவழ எனக்கு ஒரு
வரம் வேண்டுகிறேன் தாயே.....

ஜ. மேரி கொன்சலா
தரம் - 8
துட்டுவாகை
அருளாளர் அன்னை தெராசா ஆல

# நல்லாயனாகிய இயேசுகிறிஸ்து


நல்ல ஆயன் என்னில் அக்கறையுடன் இருக்கிறார்
நல்ல ஆயன் என்னை அறிந்திருக்கிறார்
நல்ல ஆயன் என்னில் அன்பு செய்கிறார்
நல்ல ஆயன் என்னில் அக்கறையுடன் இருக்கிறார்
நல்ல ஆயன் எனக்கு உணவளிக்கிறார்.
நல்ல ஆயன் என்னில் பெயர் சொல்லி அழைக்கிறார்
நல்ல ஆயன் என்னை வாழ்த்துகிறார்
நல்ல ஆயன் என்னை பாதுகாக்கின்றார்
நல்ல ஆயன் என்னை குணப்படுத்ததுகிறார்
நல்ல ஆயன் என் முன்னால் செல்கிறார்.
நல்ல ஆயன் என்னை செயல்படுத்துகிறார்
நல்ல ஆயன் எனக்காக தன் உயிரையும் கொடுக்கிறார்

அ. சே. ஆன் நிதர்ஷலா
தரம் - 6
சேனைக்குடியிருப்பு
புத்தளம்



**அன்பின் தம்பி தங்கையரே!**

மறை அரும்பில் பிரசுரிப்பதற்கு நீங்கள் ஆர்வத்துடன் அனுப்பும் அனைத்து ஆக்கங்களுக்கும் நன்றி. உங்கள் சுவைமிக்க ஆக்கங்களை தொடர்ந்தும் எமக்கு அனுப்பி வையுங்கள்.



நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் அனைத்தும் நன்கு ஆராய்ந்து உங்களின் பங்குத் தந்தை அல்லது ஊக்குவிப்பாளர் உறுதி செய்திருத்தல் வேண்டும். உங்கள் ஆக்கங்களை தெளிவான கையெழுத்தில் எழுதி அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்வதோடு ஓவியங்களை அனுப்புபவர்கள் பென்சில் மட்டும் உபயோகித்து ஓவியங்கள் படங்கள் வரைதல், படங்களை பிரதிசெய்து அனுப்புதல் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்ளும் படியும் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் ஆக்கங்கள் மறையை தழுவியதாக இருக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

உங்கள் ஆக்கம் பிரசுரமானதும் உங்களுக்கு ஒரு மறையரும்பு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். எனவே உங்கள் பெயர், முகவரி, பங்கு, மறைமாவட்டம் என்பவற்றை தெளிவாக எழுதி அனுப்புவதுடன், தொலைபேசி வசதி இருப்பின் அவற்றையும் குறிப்பிட்டு அனுப்பவும். இறைத்தந்தை உங்கள் ஒவ்வொருவருக்கும் அருளியுள்ள திறமைகளை வெளியுலகிற்கும் காட்டி ஏனைய பிள்ளைகளும் பயன்பெற உங்களுக்கான இம்மறையரும்பு சஞ்சிகையை பயன்படுத்துங்கள்.

**“இயேசுவின் சிறிய மறைதூதர்களே!**
**மறையுரைக்க வாருங்கள்.”**

தேசிய செயலகம்

# அம்மா

வலி கண்டு ஓடும் உலகில்
வலி கொள்ள காத்திருக்கும் உயிர்
உணவின்றி இருந்தாலும்
உதிரம் கொண்டு உணவளிப்பார் அம்மா
உணர்வின்றி போனாலும்
உயிர் காத்தே தான் மடிவாள் அம்மா
அகராதி பல கோடி போனாலும்
அர்த்தம் காண முடியாத அன்பின் இருப்பு அம்மா
கடவுள் இருக்கிறார் என்றாள்
அது அன்னையின் வடிவில் தான்.




## சமாதானம் மலரும் நத்தார் மற்றும்
## இறையாசீர் நிறை புதுவருட வாழ்த்துக்கள்






தேசிய இயக்குனர்,
தேசிய செயலகத்தில் பணிபுரியும்
அருட்சகோதரிகள், அண்ணா
மற்றும் அக்காமார்.




ශුද්ධාසනීය ධර්මදූත සංගම්, 19 බැල්කම් පෙදෙස, කොළඹ 08
பாப்பிறை மறைபரப்புச் சபைகள், 19 பலகம் இடம், கொழும்பு 08
Pontifical Mission Societies, 19 Balcombe Place, Colombo 08, Sri Lanka
Tel / Fax : 011-2685673 email : ndpms@sltnet.lk
Website: pontificalmissionlk.org